உ

கணபதிதுணை.

எல்லாம்வல்லசித்தருதுணை. ஸ்ரீ.

கச்சிக்குமரகோட்டக்கடவுள்

திருவடிப்புகழ்ச்சி

மாலை.

இஃது

மகாவித்வான் சித்தாந்தரத்நாகரம்,

அரன்வாயல்

வேங்கடசுப்புப்பிள்ளையவர்கள்

இயற்ற

காஞ்சிபுரம் பென்ஷன் ஓவர்சியர்

அருணாசலமுதலியாரவர்களால்

சென்னை.

இந்து யூனியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

மன்மதவருடம் இடபரவி.

கணபதிதுணை.

எல்லாம்வல்லசித்தகுருதுணை.

கச்சிக்குமரகோட்டக்கடவுள்

திருவடிப்புகழ்ச்சிமாலை.

இஃது

மகாவித்வான் சித்தாந்தரத்நாகரம்.

அரன்வாயல்

வேங்கடசுப்புப்பிள்ளையவர்கள்

இயற்ற

காஞ்சிபுரம் பென்ஷன் ஓவர்சியர்

அருணாசலமுதலியாரவர்களால்

சென்னை.

இந்து யூனியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

மன்மதவருடம் இடபரவி.

உ

முருகக்கடவுடுணை.

சாத்துகவி.

முருகதாசசுவாமிகளென்றுந் திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்
விளங்குகின்ற
ஸ்ரீமத்-தண்டபாணிசுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளியது.

எனதுவலத்தோளனையவேங்கடசுப்புப்புலவனிமையாரேத்துங்
கனமகிமைக்கச்சிநகர்க்குமரகோட்டத்துறையுங்கந்தவேண்மீ
தனகமதுரத்தமிழாலரியதிருவடிப்புகழ்ச்சியாதியோதி
யினம்வெகுபாமாலைதொடுத்திடுவேனென்றுலகுணரவிசைக்கின்றானே.

[illegible]
[illegible] கண்பிரீதிதிதுவா

எல்லாம்வல்லசித்தர்துணை

காஞ்சிமாநகரத்

திருக்குமரகோட்டக்கடவுள்

திருவடிப்புகழ்ச்சிமாலை.

காப்பு.

விநாயகர் [illegible]

[illegible] களிற்றுமுகக் [illegible]
[illegible] அருள் செய்ப் புனை [illegible]
[illegible] திவண்ணனுக்கே [illegible]
விகடச்சக்கரத் தந்தியே [illegible] (௧)

திருக்கோட்டில் நாயகர்.

ஒருகோட்டுத் திருமாதுமயிராமலைமேல் [illegible]
வொளிர்காஞ்சித் திருக்குமரகோட்டத்தேயிருந்தெங்கள்
திருக்கோட்டுமுருகன் திருவடிப்புகழ்ச்சிமாலை
செப்பவியக்கருள்புரியாநிற்குமிவணம்மனை
குருகோட்டத்தினைப் புனைந்து பாணமிசைவீற்றிருந்த
[illegible] பணியகினைபொழுதினையோறவெதிர [illegible]
சிருகோட்டுக்களிற்றுமுகத்தெம்பெருமானிருந்தா
ளிணைபோற்றகப்போதினிறுவியமைறஞ்சுதமே (௨)

நூல்

பூமேவுமாருயிருக்கோருயிராயெனற்கு
பொன்றுமெய்ப்பொருளாயஞ்ஞானவிருணீக்குந்
தூமேவுஞானமணிவிளக்காய்ப்புண்ணியம்போற்
றுலக்கமுறமலர்ந்தருண்மாமணங்கமழ்ந்தொண்போத

மாமேவுபேரி[illegible]
வளம்பதியிற்றிருக்குமரகோட்டமுறைசெவ்வேள்
பாமேவுபலகலையுமுணருமுழுப்புலவன்
பத்தர்புகழ்சித்தர்பிரான்பங்கயப்பூம்பதமே

சுத்தமறையாகமம்பல்கலைகளொடாறுகுலவு
சொல்லாகிப்பொருளாகிவாக்கியங்களாகி
வித்தையறமுப்பொருளுந்தெரிதருபாஞான
விளக்கமெனமிகத்தழைந்துசிறந்தடியேனைய
மித்தமிழும்புனைந்தருளிக்குடிலையிலட்பொருளா
யென்னிதயகேசிரத்துமெழுந்தருளாநிற்கு
முத்தரினஞ்சூழ்காஞ்சித்திருக்குமரகோட்ட
முருகவேண்மணநாறுமுண்டகப்பூம்பதமே

மந்திரமாய்ப்பதமாயவன்னமாயசுத்தத்துவமாய்
வானபுவனமாயகலையாயிவையனைத்துமியக்
யந்திரமாயசெபவதமாயமலராயமலாபூச
கிமிடமாயவறிவுட்பேரொளியாகிப்பரந்த
தந்திரமாமறையாகிநடுமுடிவிலைடிகரு
தற்பரமாய்ச்சிற்பரமாய்நனிவிளங்காநிற்கு
மிந்திரனாதியாவணங்கத்திருக்குமரகோட்டத்
தெழுந்தருளுஞ்சண்முகவேள்சரோருகப்பூம்பதமே

அண்டமாயகத்தலாயகப்புறமாதயனு
யவிர்புறத்துறதியாகிப்புறப்புறத்தாரகையாய
பிண்டமாயசமானமாகப்புறஞ்சிவனுமாய்ப்
பேசுபுறமனமாகிப்புறப்புறத்துறைவராய்க
கண்டமாயகண்டமாயிவற்றினுட்பேரொளியாய்க்
காரணமாயமுதனடுவீறிலதாகியோங்கும்
பண்டமாதவர்பரவுதிருக்குமரகோட்டப்
பரஞ்சுடராயிருந்தொளிர்காங்கேயனமலரடிப்பதமே

மண்ணாகிப்புனலாகியழல்வளியாயவானாய
மதியாகிக்கதிராகியியமானனாகி
யெண்ணருமெண்மூர்த்தத்துண்ணிலைமூர்த்திகளா
யிணங்குகின்றசத்திகளாயவாகுறவான்றனையா

பெண்ணாகியாணாகியலியாகியல்லாப்
பெற்றிபாயமறையிணையில்பொருளாகிநிற்குந்
தண்ணாரும்பொழிற்காஞ்சித்திருக்குமாரகோட்டச்
சந்நிதியண்ணன்னிதியாஞ்சேநதன்மலர்ப்பதமே. (௫)

அருவாகியருவிலொருநாலுகுணியாகி
[illegible] களகிரகங்கள்சேறிந்தவருவுருவா
யுருவாகியருவிலொருநான்குநிலையாகி
யலகிலவாந்தானாகியே [illegible]
திருவாகி [illegible] திருவடிப்பதாகிச்
செல்வ [illegible] காயத்திகழ்தருமாலியாகருணா
குருவாகி [illegible] காஞ்சித்திருக்குமரகோட்டங்
குடிகொண்ட [illegible] பெருமானகோகனகப்பதமே. (௬)

மணியுமணிபொளியு [illegible] பணையுமிசையும்போன
மலருமலர்மணமும்போற் [illegible] தாங்கலப்பி
னணியுயிர்கடொறுங்குலவி [illegible] யுபகரிக்கு
நாயகமாயத்தாபரமா [illegible] கண்ணைப்
பணியுமவரன்புடையுளளாவி [illegible] மலாந்து
பரிமளஞ்செய்பொ [illegible] யுமிழாநிற்கும்
பிணியகற்றியொளிர்காஞ்சித்திருக்குமரகோட்டப்
பெருங்கோயிலுமைமுருகப்பெருமானபூம்பதமே. (௭)

சத்தாகி [illegible]
தன்மைகள் [illegible]
கொத்தாகியகொத்தில [illegible] குமருண்மணமாய்க்
குவந்த [illegible] விரிந்தெழுந்தவொளியாய
வித்தாகிவித்தமைந்தும்வழங்குமுதலாகி
விளக்கமிகுபூரணமா [illegible] லரூவின
முத்தாகிபொளிர்காஞ்சித்திருக்குமரகோட்ட
முதல்வனுமைபுதல்வனிருபதுமமலர்ப்பதமே. (௮)

தெருளாகிப்பகுவதைத்தெருட்டியருள்புரியுந்
தேசிகனையத்தேசிகாபரபலருமுளத்துன்னும்
அருளாகியருளொளியாயருட்கண்ணிற்றோன்றி
யருவினைகளோட்டுமறததிகழ்தருமாலென்ப

ரிருளாகுமணிகண்டத்தெம்பெருமானுதற்க
 ணின்றதழற்பொறியாறுய்த்தோன்றிவளர்ந்தொளிரமெய்ப்
பொருளாகியொளிர்காஞ்சித் திருக்குமரகோட்டப்
 புனிதனிருவனிதையர்நாயகனை மணப்பூம்பதமே. (௯)

கேவலத்தினொடுசகலஞ்சுத்தமெனமூன்றாக
 கிளரவத்தையுயிர்சாரப்பொருந்தியுடன்மன்னு
மாவலஞ்செயத்துணையாகித்தண்ணருட்பேரின்ப
 மருந்தாகியருந்தவரைவாழ்விப்பதாகித்
தேவர்முடிபுனையவொளிர்தருசூளாமணியாயச
 சின்மயமாய்த்திகழ்தருமானமுதந்தமிழ்ப்பாவாண
ராவலொடுபுகழ்காஞ்சித்திருக்குமரகோட்டத்
 தாறுமுகப்பெருமானின்பூறுமலர்ப்பதமே (௧௦)

பொன்னாகிமணியாகியிருநிதியாயப்பலவாய
 போகமாய்ப்போகமெலாமன்பருக்கேவயாரு
மன்னாகிமன்னவர்கடொழுதேத்துமுதலா
 மண்ணவர்க்கும்விண்ணவர்க்குந்துயாமாற்றுந்துணையாய
தன்னாகமுச்சத்திவடிவினதாயத்தலைமைத்தாய்த
 தன்னிணையுமுயர்வுமிலதாய்விளங்காநின்றகுந்
தென்னருந்தமிழ்க்காஞ்சித்திருக்குமரகோட்டச்
 சேந்தனருண்மணநாறுந்தாமரைப்பூம்பதமே (௧௧)

முப்பதமாயமுப்பதத்தின்பொருளாகித்தேவர்
 மூவருக்குமுதலாகிமறைகளெலாநவிலு
மெய்ப்பதமுந்தானாகியிலங்கியமெய்ஞ்ஞான
 வின்பவருட்கடலமுதாயெம்முடலுமுயிரும
வெப்பமறக்குளிர்ந்தெழுசகோதயமாயப்பிறவி
 வேலையினின்றெடுத்துமுத்திக்கரைசேர்க்குங்கலமா
மொப்பறுசீர்புனைகாஞ்சித்திருக்குமரகோட்டத்
 தோங்குமருட்காங்கேயன்றேங்கமழ்பூம்பதமே. (௧௨)

ங்கவாகிச்சங்கரனார்குளக்கணிலேதோன்றி
 மற்றவர்க்கேகுடிலையின்மெய்ப்பொருள்பகர்நிற்குந
தகவாலத்தாதையின்றிண்டோள்வரைமேலேறுஞ்
 சடைமுடிமேற்குலவுமடித்தலத்தில்விளையாடு

மிகவாசைகொளவவர்மார்பகத்துமலர்த்தாரின்
வெறிகமழத்தவழ்ந்துபலபுதுமைசெயாநிற்குஞ்
சுகவாழ்க்கைமிகுகாஞ்சித்திருக்குமரகோட்டத்
தோன்றன்முருகோன்றனதுதேன்றுளைசபூம்பதமே. (கங)

ஆரணனைக்குடிலையின்மெய்ப்பொருள்கேட்டவர்நா
ளவனடுங்கவுதைத்தவனாணவவிருளையோட்டு
நாரணவியவன்றனதுசிந்தையின்மேன்முடிமே
னலம்பெறவைத்தேத்திவழிபாடியற்றவவற்குப்
பூரணத்தினிலைகாட்டுந்தெளித்தவனையாளும்
புரிந்தொருதன்சந்நிதியிலவனிற்கப்புரியுங்
காரணிநோறறிடுங்காஞ்சித்திருக்குமரகோட்டக்
கந்தனருளெந்தையரவிந்தமலர்ப்பதமே. (கச)

உலகுவியந்தேத்தவெடுப்பவுயர்திருமேற்றளியி
லுவணகேதனன்றனக்குச்சாரூபநல்கு
மிலகுமவனுளத்திலமர்ந்தயன்வழிபாடேற்கு
மினிதவனோர்கன்னியாசெங்கரங்களினல்வருடக்
குலவுமிகுமாகமந்தேரந்தணர்செய்பூசை
குதுகுலிப்பக்கொண்டவாவேட்டவைவழங்காநிற்கு
நிலவுபுகழ்வளர்காஞ்சித்திருக்குமரகோட்ட
நிறைந்தொளிர்செங்கடம்பணிருசுகந்தமலர்ப்பதமே. (கரு)

இறையனாரகப்பொருட்குமுத்தமிழ்ப்பாவாண
ரியற்றியருளுரைகேட்டுநக்கீரனார்செய்
முறையினுஞ்சொன்னயமும்பொருணயமுந்தோய்ந்த
முதுகுறைவாரின்னுரையின்மகிழ்ந்துளும்பக்கண்ணிற்
சிறையிடாவானந்தவெள்ளநீர்பெருக்கித்
செந்தமிழ்மான்வளர்சங்கப்பலகையில்வீற்றிருக்கு
நெறியுளார்வளர்காஞ்சித்திருக்குமரகோட்ட
நீங்காதகாங்கெயனார்சேந்தமலர்ப்பதமே. (கசு)

சித்தரொடுமுத்தரினம்புகழ்ந்தேத்தும்பொதியச்
செந்தமிழ்மால்வரைவளருங்குறுமுனிவருள்ளப்
பதிநறும்புனலாடுமெவர்வழிபாடேற்கும்
பைந்தமிழினிலக்கணத்தையவர்க்கினிதுவிளக்கு

திருக்குமரகோட்டக்கடவுள்

கொத்தடிமையாமவர்தந்திருமுடிமேனடிக்குங்
   குடிலையினுட்பொருளாகியவர்விழிமுன்னிலவு
மெத்தலமும்புகழ்காஞ்சித்திருக்குமரகோட்டத்
   தேகம்பர்மகிழ்முருகவேளிருபூம்பதமே. (கஎ

மிக்கீரநறுஞ்சாந்திற்பரிமளிக்குந்தமிழால்
   வேய்ந்ததிருமுருகாற்றுப்படைதந்தொடைகேட்டனபா
ணக்கீரனார்தமைவெஞ்சிறைமீட்டுக்குறளை
   நலிந்திடவோர்சிகண்டியின்மேலிவாந்தெதிர்போந்தருள
மக்கீரமொழிமடவாண்முருகாவென்றழைப்ப
   வற்றகரம்பெற்றிடுமோறவண்முனஞ்சென்றருளு
மிக்கீரவயற்காஞ்சித்திருக்குமரகோட்டத்
   தெழுந்தருளுஞ்சண்முகவேள்பங்கயப்பூம்பதமே. (கஅ)

முட்டையெனமோர்கவிப்பொய்யாமொழிப்புலவன்பாட
   முட்டைக்குங்காளைசதிலவனெதிர்போந்தருளுங்
கட்டிளைமையுருக்காட்டியெளமைதிருவாயாற்
   கழறினிதுபெரிதரிதுகொடிதெனுநான்ககவன்
மட்டறுமன்பாற்கேட்கவாஞ்சையினுறைவன்
   மாமேறிக்கனியுதிர்க்குமபணையினொடுநிலவுஞ்
சிட்டாபுகழ்சிவகாஞ்சித்திருக்குமரகோட்டச்
   செல்வமுருகேசனிருநளினமலர்ப்பதமே (கசு)

தருணமடவார்சுகழிந்தசிந்தையின்மாலவெறுத்துத்
   தடவருணைசிகரிமுடியேறிவிழும்புலவோன
மரணமுறுவகைதாங்கியெதிர்ந்துபதேசிகரு
   மற்றவனசெய்திருப்புகழ்ப்பாமாலைவனைந்தருளு
மருணனெனயிறபரியூர்ந்தமைந்திடவோர்கம்பத்
   தருட்காட்சிதருமிகற்பாவலனைவெலுந்துணையாங்
கிரணமெறிமணிப்புரிசைத்திருக்குமரகோட்டக்
   கேண்மைமிகுமாண்மைமுருகேசன்மலர்ப்பதமே (௨0)

சீரலைவாய்ப்பதிமேவிவழிபடுமோர்தொண்டன்
   சிந்தைமகிழ்தரவவன்செய்மூகைதவிர்த்தருளி
வீரமிகுந்தவன்பாடுகலிவெண்பாமாலை
   வனைந்தருளுமவயிணவனுமொருபகழிக்கூத்தன

பாரவற்றுமைமையைநீக்கவவன்கணவிற்போந்து
பணித்தவன்வாய்மலர்ந்தபிள்ளைததமிழ்ப்பனுவல்சூடு
சீரகத்துமிகுகாஞ்சித்திருக்குமரகோட்ட
நிதியாகிவளாமுருகப்பெருமாள்பூமபதமே. (உக)

சத்தியருவாய்ககிளரும்பரங்கிரியின்மேவித்
தமராகிவானவர்கள்கற்பகப்பூமாரி
பத்தியினற்பொழிநதபலதிறையளித்துதெய்வப்
பையகிரிபாங்குஞ்சரியைத்திருமணஞ்சநேர்ந்து
கைத்தலஞ்சென்னியிலேறவஞ்சலித்துப்போற்றிக்
கவினமுமகாட்டித்திறைஞ்சவவர்சிகாமணியாய்ப்பொலியு
நித்தியமாவளககாஞ்சிததிருக்குமரகோட்ட
நிலவுமயிற்குலவியகைபபுலவனமலர்ப்பதமே. (உஉ)

ஒருமாவினகனிபெறற்காத்தாதைமொழிவழிநீ
ஞலகுமயிற்பரியிவர்நதோர்கணத்துவலஞ்சூழ்ந்து
ரும்மாதுஞ்சுரராவுந்தினகரனுந்தவஞ்செய்
திருவாவினன்குடியிற்றிருப்பழனிமலைமேற்
குருமாட்சிதிருககோலஞ்சிறப்பவெழுந்தருளிக்
குறுமுனிவரபோகராதியாதொழச்சித்தாடுங
கருமாயககுநதிறற்காஞ்சித திருக்குமரகோட்டங்
காமுறுகுமாரகுருசாமிமலர்ப்பதமே. (உங)

திருககுடநதைப்பெருநகருமினியவலஞ்சுழியுஞ்
சோங்தொளிருந்தாதைசிவபெருமாற்குக்குடிலைப்
பெருகமிகுபொருள்பேசியவனுதியும்பா
பேணிவழிபடத்திருவேரகத்துமிளிர்ந்தருளு
மருக்கமழுஞ்செங்கடம்புகூதாளம்புனைநது
மதுப்பிலிற்றிமுத்தரளிமாந்தமலர்ந்திருக்கு
முருக்கிளருங்கச்சிநகர்ததிருக்குமரகோட்ட
முடையவன்வேற்படையனருட்கொடையன்மலர்ப்பதமே. (உச)

உம்பரொலாம்போற்றுபழமுதிர்சோலைவெற்பு
மோங்குதிருககைலாயமேருமலையாதி
யிம்பர்புகழ்குன்றுதொறுநடமாடிநிற்கு
மென்னிருகண்கனித்துவிருந்தயரவெதிாகுலவு

நம்பியவென்சொற்றூண்டுவிழைந்தெனையாட்கொள்ளு
　நான்கேட்டவரங்களெலாங்காதலொடுநல்குங்
கும்பமுனியனையர்புகழ்திருக்குமரகோட்டக்
　கொற்றவனூன்முற்றுமுணர்வுற்றவன்பூம்பதமே. (௨௫)

எம்மையினுந்தொடர்ந்தெனையாள்கின்றபதஞான
　விரவியெனவென்னிதயவெளியிலெழுந்தருளி
மம்மரிருண்மாற்றியெனைத்தேற்றுபதங்கரும
　மால்வரையைப்பொடிசெய்பதமாயைதருமோக
வெம்மையறத்தண்மையுறநிழற்றுபதம்பிறப்பினை
　மேவுதொடர்திரோதையெனவுபசரிக்கும்பதமாம்
அம்மைதவம்புரிகாஞ்சித்திருக்குமரகோட்டத்
　தங்கசவேள்பணிசெவ்வேள்செங்கமலப்பதமே (௨௬)

எண்ணுதொறும்வழுத்துதொறுங்கேட்டுணருந்தோறு
　மினித்தன்பர்பவமாற்றித்தனித்தபரஞானக்
கண்ணுதவியகக்கணிர்குலவுபதமால்சோ
　கருத்தொடுவாக்கினுக்கெட்டாதிருந்தபதமளவில்
விண்ணுலகத்தேவர்முதற்பல்கணத்தோர்நாளும்
　விழைந்தபதமுயிர்க்குயிராய்த்தழைந்தபதமெனப்பார்
தண்ணுலவுபொழிற்காஞ்சித்திருக்குமரகோட்டத்
　தனிலுறைசுப்பிரமணியக்கடவுண்மலர்ப்பதமே. (௨௭)

தத்துவங்களாறாறுக்கப்பாலாயோங்கித்
　தழைத்தபதந்தற்பரமாய்நின்றபதமூவாச்
சித்துருவாய்ப்பொலிந்தபதஞ்சிந்தியாடுமுதசிச
　சேகரமாய்நின்றபதஞ்சித்தாகுழாம்பரவ
வத்துவிதமொடுதுவிதமானபதமின்ப
　வாழியிடையருளமுதமாய்த்தழைந்தபதமாங்
கத்துதிரைப்புனற்காஞ்சித்திருக்குமரகோட்டங்
　காதலித்துவாழ்கார்த்திகேயன்மலர்ப்பதமே. (௨௮)

என்னுயிராயென்னறிவாயெனையுணர்த்தியருளு
　மெழிற்குருவாய்த்தெய்வதமாயெனையணுவும்பிரியா
தென்னுறவாந்தாதையாய்த்தாயாகிப்போற்று
　மிருநிதியாயைந்தருவாயெனையென்றுகொள்ளு

மென்னுடையபெருமானையென்னிழப்பிற்றேன்று
நின்பசுகோத்தியாகித்தழைத்தொளிரும்பதமா
நினனுமுகிறவழ்புரிசைத்திருக்குமரகோட்ட
மேயவருட்சேயமுருகன்றாமலர்ப்பதமே. (௨௯)

இந்திரியவயமாகிவிடயமெலாநுகர்வா
னிம்பரலமருமேனைக்குறிக்கொடுதனயகம்பே
சுந்திறவீந்தடிமைகொண்டாள்கின்றபதமெனவான்
றுணையாகிமுன்பினுமாபகாற்புறமுஞ்சூழ்ந்து
வந்தருளிவாழவிக்குபதமுறுகண்மாறி
மாசிலருளொளிபுரிநசெனசிக்கைபில்வாழ்பசமாஞ்
சந்திரசேகரறகருணந்திருககுமரகோட
சண்முகவேட்குமாரகுருவொண்முளரிபபதமே (௩௦)

ஓரேனைதீதடயனைமுடிமீதட
மேொங்கபசெகதழறகடவறுகறகண்மருபொறியாய்
பாரோழுங்கண்டசகபசஞசாவணப்பூநதடநின்
பரிநதாடலநதஙகாசதிசைகமின்ஞெநங
காரோகுழலாயயுகுளிாமைநதாகினியுங்
கணெப்ரியுதடைணகததிருப்பதராஞ
சீரேறவளாகாருசித்திருக்குமரகோட்டத
தினகரனைமிளிர்முருகநாயகனப்பதமே. (௩௧)

பழுத்துமுதலொருமிலக்கணமைநதுமுணர்வோ
ரேதுநெறியுனர்ஜயிறுமயூர்தயதவமாமனதநம
யபூதமொருநாவகத்துமின்னமுதவடிவாய்
வயாகியவாதமிழ்தந்தொடையலவேயந்திருகண்காணப்
பழுத்தவருட்கனிவிடைமாடிமுடியேறிப்
பரகதியினெறிகாட்டுநேதுயநிலைப்பதமாம்
விழுந்தகுசிர்மிகுகாஞ்சித்திருக்குமரகோட்ட
வேந்தனுயாசேநதனெளிசாந்தமலர்ப்பதமே. (௩௨)

கருவிகளாலுணர்வதனுககரியபதமன்பர்
கருத்தவிழவெளியின்வெளிநிலவுபதந்தன்னோர்
துருவினுமெஙகணுஙகிடையாததூயபதம்வானோர்
தொல்பதங்கள்பலவும்வெறுத்துயர்ந்தயோதனர்க்குப்

பெருவியனூர்சிவசாயுச்சியநேரும்பதந்தேன்
பெய்யுமலர்புழுகொடுசெந்தணிந்துகமழ்பதமாந்
திருவமிகுநகர்க்காஞ்சித்திருக்குமரகோட்டத்
திண்ணியவேணண்ணியகைப்புண்ணியன்பூம்பதமே. (௩௩)

தற்போதமுனைந்தவிடத்தொளித்தகன்றபோழ்திற்
றபனனெனவிலகுபதஞ்சகளமுடனகளப்
பொற்போதத்திகழ்ந்தபதம்புண்ணியர்கைம்மலர்தூய்
புனையகலுமுழுவலன்பாற்போற்றுபதமுண்மைச்
சொற்போதகாசிரியருள்ளுணாவாய்த்தோன்றித்
துணையாகுமிணையின்மறைக்கழல்புனைபூம்பதமாம்
வெற்போதமிசையெறிவேற்கரன்குமரகோட்ட
மேவியசட்குணமுருகன்கோகனகப்பதமே. (௩௪)

நனவுகனவொடுசுழுத்திதுரியமிகுமதீத
நண்ணுதொறுமுண்ணிகழுமுயிர்க்குறுவான்றுணையாய்
வினவுமொருநால்வாக்கினொடுமீளவெழுப்பி
வியஞ்சகமாயுடன்போநதுகுலவுபதங்கணைசேர்
சினவில்வனசரர்மகள்வேட்கையின்மீறிவெங்கான்
றிரிந்திறையுஞ்சலிப்பினொடுதளர்வுமிலாப்பதமாந்
தனவணிகர்வளர்காஞ்சிததிருக்குமரகோட்டத
தாசரதிமருகனழகாவனசப்பதமே. (௩௫)

உம்பர்குலப்பகைவரென்னுந்தானவர்தங்கிளையை
யொருமாவினுருக்கொளுஞ்சூருடன்பொருதுமாயப்பா
ணிம்பர்புகழ்ந்தேத்துநவவீராநெடுந்தூனை
யிலக்கர்புடைசூழ்தரப்பூதலமேல்வந்தருளி
நம்பனயனாரணனுதியர்மகிழவென்று
நானிலத்திற்றன்முதன்மைநாட்டியபூம்பதமாங
கம்பருறைதருங்காஞ்சித்திருக்குமரகோட்டக்
கார்மயில்வாகனத்தெந்தைகந்தன்மலர்ப்பதமே. (௩௬)

வேதமுடிபுனைந்தபதம்வேதநடுவாதி
விளங்குப்லபதவுருவாய்த்தழைத்தபதமினிய
நாதமுடியமர்ந்தபதம்விந்துவினீங்காது
நலங்கூரவளர்ந்தபதமருண்மணமேகமழ்நது

போதமுடிதழைந்தபதமியோகாந்தங்கலாந்தம்
புணர்தருசித்தாந்தமுடிபூத்தபதமென்பா
ரோதமுடிச்சிவற்கருள்செவ்வேள்குமரகோட்ட
மோங்கிவளர்பூங்கடம்பனீர்ங்கமலப்பதமே. (கஎ)

முன்னாகிப்பின்னாகிமுழுதுலகமாகி
மூதறிவாய்ச்சிற்றறிவினகம்புறமுநிரம்பி
யின்னாதவடிவாம்பொன்னூபுரதிருெலிசெய்
தேத்துதிருவருளொளியாய்விளங்குபதகாவற்
பொன்னனபதமாசிலமணியானபதமால்
போகருபதமின்பனைத்துமாக்குபதமென்பார்
சொன்னவலோபரவதிருக்குமரகோட்டந்
துன்னியமூவிருவதனமனைவன்பூம்பதமே. (கஅ)

உமிழ்திரைநீர்க்கடலுலகிலெங்கெங்குமாகி
யுன்னுவாருளந்தோறுமன்னுபதந்தெய்வத
தமிழ்மொழியிறகச்சியப்பசிவாசாரியார்தாந்
தகவுரைததபெருங்காந்தப்புராணமான்மியங்க
ளிமிழ்தரநற்றிருத்தமளிததொளிர்காப்புச்செய்யுட்
கிலக்கணங்காட்டிடவவையிலெழுந்தருள்செய்பதமா
மமிழ்தனையபுகழ்க்காஞ்சித்திருகுமரகோட்டத்
தன்பொடுவாழின்பவிசாகேசன்மலர்ப்பதமே. (கக)

விதியானோர்மேனிகொளவெனைப்புவிமேலென்றும்
விதியாதென்றிறுமாப்பததண்ணருளாலென்பாற்
பதியாரும்பெருவாழ்வுதழைப்பமிகவழங்கும்
பட்சமறவாதபதாவநிலேமேலேற்றி
மதியான்மிக்கோரவையுஞ்சிற்றடியேன்மேவி
மகிழும்வணங்குறிகொண்டுவிழைந்தெனையாள்பதமாந்
துதியார்ந்தகச்சிநகர்த்திருக்குமரகோட்டத்
தொல்குரவனமுருகவேள்கமலப்பதமே. (உ0)

சரிதைவழிநிறுவியெமைத்தன்ருதராக்குந்
தகுகிரியைநெறிபேணப்புத்திராவிழையும்
விரிதருமாயோகுனற்றத்தோழரெனநயகு
மெய்ஞ்ஞானநிலைசேரத்தானுகப்பேணு

மரியவெலாம்வல்லசித்தகுருவாகியெம்மு
னணைந்துவிழைமுத்தியொடுசித்தியெலாநல்கும
பெரியசிவகாஞ்சிநகர்த்திருக்குமரகோட்டப்
பெம்மான்சண்முகநாதன்வாரிசப்பூம்பதமே. (சுக)

அக்கரமூவிரண்டினையுமனநினைவார்தமபா
லருளினொடுகன்றைநினைந்தணையாப்போலணைந்து
மிக்கவருளமுதீய்ந்துவெம்பசிநோய்மாற்றி
மிடியொடுங்கநவநிதியும்வழங்குபதம்விண்மேற்
புக்கவயன்றிருமாலிந்திராதியோர்தம்
போக விரும்பாதசிவபோகநலகும்பதமாந்
தக்கவர்க்குபபுகலருளுநதிருககுமரகோட்டந்
தழைந்தொளிரவெழுந்தருளமேன்முருகனமலர்ப்பதமே (சுஉ)

யானினையாதுறங்குபொழுதெனககுநினைபபூட்டி
யென்னிருகண்களிப்பவெதிரநதெனனுளததேசெருமபூர
தேனினையும்பாகினையுமுறழமுதமூட்டித
தெவிட்டாதவகைமிகுநறியபதஞ்சிறியே
னானினையுமுயிரினையுமோம்புபதநதுணையா
வுவநதெமதருடபுரககுமிருநதிநோயபதமா
மேனியரில்காஞ்சிநகர்த்திருக்குமரகோட்டம்
வேட்டுறைபன்னிருநாட்டமுருகன்மலர்ப்பதமே. (சுஙு)

என்னுவிற்றமிழ்வாணிதனையிருததிததன்சீ
ரிசைத்திடமேவிழைந்தபதமென பிழையோரசிறிது
முன்னுமெலனையடிமைகொணடபதஙகுணமே
லோஙகவெனைத்திருததுபதநதொண்டாகுழாததினாமு
னின்றுமைதீரககவெதிரந்தருள்செய்பதமியல்பா
டெண்ணிலர்பாவலர்க்கருளும்வண்மைமிகுபதமாம
பொன்றுதுநெடுமதில்சூழதிருககுமரகோட்டம்
பூத்தொளிருமாததனிருசீரத்தமலர்பபதமே. (சுச)

முருகாவென்றழைப்பவர்தமருகோடிநிற்கு
மூதறிவாய்த்தழைந்தபதம்விழைந்தபொருளெல்லாம்
பெருகார்வமொடுதொழும்பர்க்குதவுபதமோரேழ்
பிறவிநெடுங்கடலிலெனையமிழ்த்தாதுமூலத

திருகாருமலங்களைந்து முத்தியெனுங்கரைமேற்
சேரவிடுத்தருளவிளைந்தெனையாளும்பதமாம்
வெருகார்சூழ்பொழிற்காஞ்சித்திருக்குமரகோட்ட
மான்மருகன்வேன்முருகன்ஞானமணிப்பதமே. (௬௫)

கந்தாவென்றழைப்பவாகவோர்கந்தாகியுள்ளக்
கவலையறத்தருட்டிவலைவீசுபதமணப்பூங்
கொந்தாருநீபமெனத்தமிழ்மாலைவண்ணக்
குழிப்பெடுத்துப்புகல்புலவோர்விழுத்துணையாமேவிச்
சந்தானகற்பகம்போலவேட்டவரமெல்லாந்
தளாவகலக்கொடுத்துமகிழ்தளிரியன்மென்பதமாம்
வந்தார்க்குமிருந்தார்க்குமருள்குமரகோட்ட
வள்ளன்முருகோன்கமலக்கள்ளவிழ்பூம்பதமே. (௬௬)

கார்த்திகையிற்சட்டிதனிலங்கிவிழைநாளிற்
கருதுவரம்பலவுமுறநோன்பாற்றியுளங்கூ
ரார்த்தியொடுதிருப்படைவீடாறுமலைதோறு
மமைந்ததிருக்கோயில்வலஞ்சூழ்ந்து திறைநல்கி
வேர்த்தழுதுநெக்குருகித்துதிபாடிநிலமேல்
வீழ்ந்திறைஞ்சும்விரதியர்க்குக்கருணைபுரிபதமாஞ்
சீர்த்திருவளர்காஞ்சிதிருக்குமரகோட்டத்
தீர்த்தனெழிற்பூரதியுறுமாரத்தன்மலர்ப்பதமே. (௬௭)

உகங்கோடிநாவிரண்டாயிரவனந்தனுலவா
துரைத்தாலுமுரைக்கருஞ்சீர்வாய்ந்தபதமறைநான்
முகங்கோடியெழுநாலாகமங்கோடிதாந்தா
மொழிந்துமொழிந்திளைத்திளைத்துத்தேடுதொறுங்காணு
தகங்கோடிமோனமுறததிகழ்ந்தவற்றின்முடிமே
லணிந்தமணிமகுடமெனக்கிளர்ந்தொளிரும்பதமா
நகங்கோடிதொறுநடிக்குந்திருக்குமரகோட்ட
நாயகன்பன்னிருபுயவேணளினமலர்ப்பதமே. (௬௮)

சுட்டிறந்தமாதவர்தங்குணமலைமேல்விளங்கித்
தோமகன்றமாமுகில்போற்கருணைமழைபொழிந்து
மட்டிறந்தமவுனவெளிப்பெருவாழ்வுநல்கி
மன்னுயிருடன்முழுதுமதுரித்துமுறைய

விட்டிறந்தபரிசிதெனப்பேரின்பவெள்ள
விரிகடலுட்பிறவியறவமிழ்த்தியருள்பதமாங்
கட்டிறந்தநெறித்துணையாந்திருக்குமரகோட்டக்
கட்டழகன்குழகன்முருகேசன்மலர்ப்பதமே. (௪௯)

தன்னிலையையெவ்வயினுநோக்குகவுமாரர்
சஞ்சிதத்தின்றொடர்பறுத்தாகாமியமேறாது
முன்னிலையாயிருந்தருந்துபோகமெலாநுகரு
முழுதுணருமுதுக்குறைவுமுதலாறுகுணமு
மன்னியமன்றெனப்புணரவருணைஞானவாழ்வி
லனவரதந்தமிழ்முனிபோறகுலவவருள்பதமாஞ்
சொன்னிலைக்கும்புகழ்பலசேர்திருககுமரகோட்டந்
தோய்ந்தொளிர்செவ்வேள்வள்ளிகாந்தன்மலர்ப்பதமே. (௫௦)

விலையறியாமாமணியாய்மாற்றறியாப்பொன்னாய்
வண்ணறியாக்கற்பகத்தருப்பழுத்தசுறங்கனியா
யலையறியாத்தெருள்விளைக்குந்திருவருண்மாக்கடலா
யக்கடலிற்பொங்கியெழுமானந்தவமுதாய்க
கொலையறியார்மனக்கோயிற்குலவுதயாநிதியாய்க்
குஞ்சரியுங்குறமானும்புரிபணிகொள்பதமாங்
கலையறியாரணங்கயன்றாழ்காயாரோகணஞ்சேர்
கச்சியொளிர்திருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௫௧)

வெண்மணியாற்குயிற்றியவெண்பட்டாடையுடுத்து
வெண்மணிப்பூணலங்காரப்பாதாதிகேசப்
பெண்மணிவெண்கலைமடந்தைமுடிக்கணிமோலியதாய்ப்
பிறங்குமனக்கோயிலிலேற்றருண்ஞானவிளக்காய்த்
தண்மணிநாத்தவிசேறுநவரசச்சொல்லரசாய்ச்
சதுமுகனேடைவளிறைஞ்சுஞ்சகலகலாநிதியா
வண்மணம்பானமருளாபதமாங்கச்சபமாலைதரும
விபன்காஞ்சிதிருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௫௨)

பூந்துளவமணிமார்பன்கமண்டலநீர்வாக்கப்
பொன்மாமிசெங்காந்தளங்கையினால்விளக்கிச்
சாந்துநறும்புழுகொடுமான்மதம்பூரங்கூட்டித்
தண்பனிநீர்பெய்தமணக்கலவைமிகப்பூசித்

தேந்துளிக்கும்பன்மலர்தூயட்சதையுஞ்சாத்திச்
சேயிழையாரிருவரையீந்தருளுமணத்திருநான்
காந்திசொலிவணங்குபதமாம்புகழ்சேர்காஞ்சி
நகர்க்குமரகோட்டமுறைகுகப்பெருமான்பதமே. (௫௩)

அன்புருவாந்திருத்தொண்டரொங்கிருந்தேததுகினு
மங்கவர்சொற்கேட்டருளப்போதருமன்புளதா
யின்புருவாயவர்மகிழத்தானுமகிழ்வதுவா
யிறையேனுமவர்குழையிற்பெரிதுகுழைவதுவாய்த்
துன்புருவாம்பவத()டக்கிலகப்படுத்தாதான்ம
சொருபத்தேகளங்கமறவிளங்குபதமென்பார்
தன்புருவநுதற்கணுமைகோட்டமொடேகம்பந்
தழைக்கநடுவொளிர்குமரகோட்டமுற்றோன்பதமே. (௫௪)

ஓரெழுத்தாயீரெழுத்தாய்மூவெழுகதாய்நான்கா
யொளிர்தருமைந்தெழுத்தாயாறெழுத்தாயெட்டெழுத்தாய்ச்
சீரெழுத்தின்பலபேதமந்திரமாவடிவாய்த்
தியானிப்பார்க்கீருள்பலனுய்ப்பலன்கனிந்தமுதலாய்
நீரெழுத்தின்யாசகைநிலையாமைதெரிந்துணர்வார்
நெஞ்சகததிலஞ்சலெனத்தஞ்சமருள்பதமாம்
பேரெழுத்திற்கதிகாட்டுநதிருக்காஞ்சிநகரிற்
பிறங்குமதிற்றிருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௫௫)

இலக்கரொனுந்தானையொடுநவவீரர்புடைசூழ்ந்
தேவுபணிபுரிந்தாவலொடுபோற்றிநிற்ப
விலக்கருமன்னவர்முடிமேற்சிங்கா,சயின்மேற்றோண்மேல்
விளையாடிவெற்றியவர்க்கருள்பதமாமுழுதுந்
துலக்கமுறவவனிவெ..லாமளந்தாலும்போதாச்
சுருக்கமுடைத்தெனப்பெருக்கமொடுபரந்தபதமாங்
கலக்கமின்மாதவரோத்தப்பலதளிவாழ்கம்பூர்
கச்சிநகர்த்திருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௫௬)

சங்கரனார்தழல்விழியிற்பூத்தபதந்தேயு
தன்னொடுவாயுவும்பொறுக்கலாற்றாதுசுமந்து
கங்கையுறுஞ்சரவணத்தில்விடுத்தபதமொளிசேர்
கஞ்சமலர்ப்பதம்பனிரெண்டாய்த்தவழ்ந்தபதந்தாய்

அங்கையினாலணைத்தெடுப்பவிருபதமாய்க்கூடி
யந்தரிதன்மடியில்விளையாடுபதமென்பார்
திங்கண்முடிச்சேனாபதிசேர்மகிழ்காஞ்சித்
திருக்குமரகோட்டமுறையருட்குருபூம்பதமே. (௫௭)

திருக்கைலைமலையினெடுஞ்சிகரிதொறுமாடிச்
சிவந்தபதந்தேவரொடுமமராடியன்னோர்
தருக்கழியமுனிந்தபதந்துணைவீரவாகு
தடமலர்க்கண்காணநெடும்புவனமெலாம்வளர்பே
ருருக்குலவிநின்றபதமும்பாகுருவாதி
யொளிரயனமதக்குரவரெலாம்போற்றுதிருப்பதமா
மிருக்குமுதற்பலமறையாகமம்புகழுங்காஞ்சி
யெழிற்குமரகோட்டமுறைதமிழ்க்குரவன்பதமே. (௫௮)

காழிமறையவனாகவந்தபதஞ்சிவஞா
னகணிசதருளுமணிச்சிவிகையிவர்ந்தபதநதோண்மேற்
சூழிசைகொளசிவபாதவிருதையர்வாக்கணையர்
சுமந்தபதங்குலச்சிறைமங்கையர்க்கரசிபோற்ற
வாழியருள்பதஞ்சமணையொழித்தபதமணநாள்
வந்தவரெலாருமுத்திதந்தபதந்தலந்தோ
றேழிசைச்செந்தமிழ்மறைநோசைவயணபபதமா
மெங்களையாண்டருள்குமரகோட்டமுற்றோனபதமே. (௫௯)

உக்கிரகுமாரனெனவவதரித்துச்செழியர்க்
குரியமணித்தவிசேறியுலகாண்டபதஞ்சீர்
மிக்கதனமேருமலைநடுங்கவொருசெண்டால்
விளாந்தடிக்கப்பரிமிசைப்போந்தெதிர்ந்தபதம்விண்ணு
ரக்கிரமமடக்குபதந்தமிழ்ச்சங்கமணந்தோய்ந்
தவிர்ந்தபதந்தென்பாண்டிநாடுபணிந்தேத்திப்
புக்கபதஞ்சேரலனாதியாதொழும்பூம்பதமாம்
புகழ்க்காஞ்சித்திருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௬0)

மதங்களெலாங்கடந்தபதமம்மதஞ்சார்தேவர்
வணங்குபதமொருபதினெண்கணத்தவர்வாழ்ந்தொளிரும்
பதங்களெலாங்கடந்தபதம்பலபுவனகோடிப்
பரப்பனைத்துஞ்சிற்றிலெனவிளையாடுபதஞ்சே

ரிதங்களெலாம்வழங்குபதமுமையவள்பூங்குழலி
லேறியறுபதமாகவீறுமிருபதமா
நிதங்களெலாம்பொழிபொழில்சூழ்திருக்காஞ்சிநகர்க்கோர்
நிதியனையதிருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௬௧)

மூலநிலத்தைத்தங்கரனாய்த்தோன்றுபதமதன்மேன்
முளரிமிசையந்தணனாய்க்குலவுபதமாலாய்ச்
சீலமலருந்தியமர்பதமனாகதத்திற்
சீகண்டருத்திரனாய்விசுத்திமகேசுரனாய்ப்
பாலநடுச்சதாசிவனாய்த்தழைந்தபதமுசிப்
பங்கயத்திற்சத்திசிவமெனத்திகழ்வான்பதமா
மேலநறுங்குழலுமையாளறம்வளர்க்குங்காஞ்சிக்
கிருநிதிநேர்திருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௬௨)

அறம்புரிவார்க்கிரங்குபதமறஞ்சிதைக்கநினைவார்க்
கரந்தைசெயவிரைந்தபதமாகமவிரோத
மறம்புரிவார்வருக்கமெலாந்தீநரகிற்படுத்து
வன்மைமிகுமறக்கருணையாற்றுபதமுகில்போ
னிறம்புரிவார்குழன்மடவார்மையலறமாட்டார்
நெஞ்சகத்திலிருந்துமுருககரந்தபதமடிமைத்
திறம்புரிவார்க்கமுதமெனத்திகழ்ந்தமலர்ப்பதமாஞ்
செல்வநிறைதிருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௬௩)

மலையிடத்துங்கடலிடத்தும்பிறவாதமருந்தாய்
வழிபடுவார்நினைத்திடினுங்கேட்டிடினுங்கண்ணா
லலைவறக்கண்டிடினுமெதிர்காணாதபொழுது
மவரிதயத்தலத்தூறிநனவினொடுகனவுங்
குலைவதறமிகவினித்துப்பிணிகளெலாமாற்றிக்
கூடுமுடலுயிர்தழைப்பச்சுகந்தருவான்பதமா
நிலையிடத்துப்பிரிவரியமுனிவர்புகழ்காஞ்சி
நீணகரிற்றிருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௬௪)

எழுத்தினியலசைதொடரச்சீர்தொடரமுறையா
லியன்றதளைதொடருநெறியோர்ந்துதமிழ்ப்புலவோர்
வழுத்துகவியடிதொடரப்பின்றொடர்ந்துஞான
மணங்கமழும்பதமதாமுணர்ந்துமகிழ்ந்தருளு

முழுத்தலைமைப்புலமைமிகுவான்பதமாயோங்கு
  மொளிமிசையந்தணன்மாலுருத்திரனும்போற்றச்
செழித்தபலவளங்காட்டுஞ்சிவகாஞ்சிநகர்க்கோர்
  திலகமெனப்பொலிகுமரகோட்டமுற்றோன்பதமே. (௩௫)

குற்றமெலாமறநீக்கிக்குணமனைத்துங்கொண்டோர்
  கோகனகவிதயமலர்க்கோயிலெழுந்தருளிச்
சுற்றமெலாமீதெனப்பேரன்புசெயவவர்க்கோர்
  துணையாகுமிணையில்பதமஞ்ஞானத்திரையி
னற்றமெலாமகற்றருட்பேரொளிப்பிழம்பாய்த்தோன்றி
  யறிவினுக்கோரறிவாகிவயங்குபதமென்பார்
செற்றமெலாங்கடந்தொளிருஞ்சிவகாஞ்சிப்பதிக்கோர்
  சேமநிதிநிகர்குமரகோட்டமுற்றோன்பதமே. (௩௬)

அருளாட்சியாங்கிலையுன்றின்பவர்க்கென்றரவோ
  ரறைந்தவருண்மொழிகேட்டுமுயிர்க்கிரங்காராகி
மருளாட்சிமனதுமறம்படைத்துநெடும்படையான்
  மாய்த்துயிருணருந்தூருக்கிடியேறுபோலு
மிருளாட்சிக்கும்பியினிற்செறித்துநமபடரா
  லிருந்தண்டமாற்றமறப்பெருங்கருணைப்பதமாப
பொருளாட்சியுடையவர்வாழ்சிவகாஞ்சிநகர்க்கோர்
  பொன்மலைபோன்றொளிர்குமரகோட்டமுற்றோன்பதமே. (௩௭)

வேதமொடாகமநிந்தைபுரிகொடும்பாதகரை
  வெறுத்தபதந்திருக்கோயில்வலம்புரியார்தம்மை
யேதமுறப்பலபிறவியெடுத்துழலுநெறியி
  லேவுபதமுருத்திரசாதனமணியாதவஞ்சூழ்
கோதுடையார்கட்புலனோடகத்தினுங்காண்பரிதாயக
  குணவாளரகம்புறங்கண்டிடவொளிர்பூம்பதமாஞ்
சூதநிழன்மருவுபரஞ்சுடர்வாழுங்காஞ்சித்
  தொல்பதியிற்றிருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௩௮)

இழுக்ககன்றநடையினராயிதயமகிழ்தூங்க
  வினியசிவநெறிபேணிப்பதிஞானவுணர்வா
லொழுக்கமிகுமுத்தமருளோங்குபதமாசை
  யொருமூன்றுமறநீத்துக்கருவியெலாங்கழற்றி

வழுக்கலிலாத்தவம்புரிவார்க்குறுதுணையாயின்ப
　வாழ்வருளித்தாழ்வனைத்துந்தீர்க்குமலர்ப்பதமா
முழுக்கருணைப்பெருங்கடலெம்பரஞ்சுடர்வாழ்காஞ்சி
　மூதூரிற்றிருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௬௯)

நிலமேலும்பொருண்மேலுமுறவினர்கண்மேலு
　நீள்காதலளித்திடுமைவிழிமடவார்மேலு
நிலமேலுஞ்சுதர்மேலும்வளர்மாலினூரு
　யிரத்தொருகூறாயினுந்தன்மாட்டுடையார்தம்மே
னலமேறும்பெருங்கருணைத்திறங்காட்டியாளு
　ஞானவுறவாகி[illegible]பரிமளிக்கும்பதமாகு
குலமேறுகுடிவளஞாசிவகாஞ்சிநகரிற்
　கொற்றவர்சூழ்திருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௭௦)

துறந்தார்க்குந்துறவாகுந்திருத்தொண்டுபுரியுந்
　தூயவர்க்குஞ்சிவஞானநெறிவளர்ப்பார்தமக்குஞ்
சிறந்தார்க்குமினியசுவையமுதூட்டிப்பசிநோய்
　தீர்க்குமொருநன்னியமங்கடைபிடித்துவாழ்நல்
லறந்தான்செய்பவர்க்குறுவான்றுணையாகிப்பொன்று
　வாக்கமிகவாழ்வருளிக்காக்குமலர்ப்பதமா
நிறந்தாங்குபொற்கடுக்கைத்தொடையுடையான்காஞ்சி
　நிருமலன்சேய்திருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௭௧)

வெற்றிமிகுவேற்படையுமயிற்பரியுந்துணையா
　விழைந்தவர்க்கும்வன்சிறகார்த்தெழுங்கோழிக்கொடியின்
கொற்றமுணர்திடுபவர்க்குந்தேவரைப்பொன்னுலகிற்
　குடியேற்றுந்திறன்மொழியுந்தொண்டருக்கும்பிரியாச்
சுற்றமெனத்தொடர்ந்தவர்வேட்டனவெல்லாங்கொடுக்குந்
　துரியபதம்பெரியபதமெனவொளிர்பூம்பதமாங்
கற்றவருக்கருள்புரிமுக்கண்ணுடையோன்காஞ்சிக்
　கடிநகருண்மாக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௭௨)

பூசனைகள்வழுவாமற்செயநிதிநேர்பவர்க்கும்
　புரையகலவிறைபணியிற்சிந்தை
[illegible]திருக்கோயிற்[illegible]பணிசெய்குநர்க்குஞ்
　செந்தமிழாற்சொற்பணிசெய்நாற்கவிப்பாவலர்க்கு

மாசகலவபிடேகக்காவடிதோட்சுமந்து
வந்துபிரார்த்தனைசெலுத்திவழிபடுநோன்பினர்க்குங்
காசினியிலருள்வழங்கும்பதமாந்தென்காஞ்சிக்
கடிநகர்சேர்திருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௭௩)

மனந்தகழியாவன்புநெய்யாகச்சிறந்த
மதியிடுநற்றிரியாகஞானவிளக்கேற்றித்
தினந்தினமும்பணிந்தெழுவார்க்கவ்விளக்கினுள்ளே
சிறந்துதிகழின்னருட்பேரொளிப்பிழம்பினோங்கிக்
கனந்தருசிற்சுகவாழ்வுவழங்கியவர்தம்மைக்
கலந்துபெருநலங்கிளர்தன்மயமாக்கும்பதமா
மனந்தனுக்கும்பணிக்கருஞ்சீர்க்கச்சிநகர்க்கணியா
யவிருநெடுமதிற்குமரகோட்டமுற்றோன்பதமே. (௭௪)

கருப்பையினிலண்டசத்தில்வேர்வையினில்வித்திற்
கதித்துதித்துச்சுரர்நரராய்விலங்காயப்புள்ளினமாய்
திரைப்புனலில்வாழ்வனவாயூர்வனதாபரமாய்ச்
செறிந்தசராசரங்கடொறுமகம்புறமுங்கூடி
விருப்பினுணற்கமுதூட்டியிளைப்பாற்றிமயக்கி
வீடருளுங்காறுமுடன்மேவுதுணைப்பதமாம்
பொருப்பணிவிற்கரப்பெருமான்றருமுருகப்பெருமான்
புலவர்பிரான்றிருக்குமரகோட்டமுற்றோன்பதமே. (௭௫)

தேனனையமொழிமடவார்விழிவேலிற்பட்டுதே
இயங்குமனந்தனைதேற்றியருள்சேர்சன்மார்க்க
ஞானமிருவகையுமெமக்குதவுபதநெடுஞ்சூர்
தனிவெருவிக்கரந்துருக்கொண்மாத்தடிந்தசெவ்வேற்
கோனெனவந்தலகிலருள்விளையாடல்காட்டிக்
குலவுபுகழ்க்கச்சிநகர்தனில்வேதவுருவா
வானளவுமாநிழற்கீழொளிர்குமரகோட்ட
மந்திரமாப்பீடமிசையெழுந்தருள்வான்பதமே. (௭௬)

சந்ததமுனினைப்பார்தஞ்சிந்தையிலேயுலவித்
தன்னிகரில்பரதநடமாடுமெழிற்றோகை
விந்துருவாம்பசுமயின்மேற்காட்சிதரும்பதமாம்
விரிந்தசகமாயையெனுங்கந்தமதிற்றோன்றி

யந்தமுறுநாளமலரிதழொடுகேசரமு
மதனுளெழுபொருட்டொடுபீசமுமாகித் திகழு
மந்தணமார்தரும்பதுமாதனக்குமரகோட்ட
மந்திரநற்பீடமுறைகந்தவேள்பதமே. (எ௭)

ஆவலொடுநமையாளும்பெருமான்வந்தானென்
றறிஞரெலாமகிழ்சிறப்பவுயர்த்தகொடிநாதச்
சேவன்முனங்தொனிப்பவுடன்றேன்றுபதந்தூது
சென்றுகொடுஞ்சூரவையிற்புகுவீரவாகு
தாவகலநினைத்தளவிலவனெதிர்வீற்றிருக்கத்
தவிசளித்தபதந்தேவசேனாதிபதியா
மாவடியிற்கந்தப்பனுறைகுமரகோட்ட
மந்திரநற்பீடமிசையெழுந்தருள்பூம்பதமே. (எ௮)

சொன்னிலைக்குந்திருக்கைலைமுக்கணெம்மானேவத்
துதித்தடைந்ததிருநந்திதேவர்தமக்கிரங்கி
நன்னிகமாகமங்கள்பகர்முப்பொருளும்விளக்கி
ஞானநுபூதியுறக்கருணையினுற்றேன்றித்
தன்னிகரிலாத்தணிகைவரையமர்ந்தபதஞ்சீர்
தழைத்தொளிருங்கச்சிவளர்தேவசிகாமணியாய்
நன்னியசுப்பிரமணியன்வளர்குமரகோட்ட
மந்திரமாப்பீடமிசையெழுந்தருள்பூம்பதமே. (எகூ)

அந்தணுக்குமம்மைக்குநாப்பணவர்மகிழ்வா
னற்புதஞ்சேராடல்பலபுரிந்தமர்ந்தபதம்பா
வித்தவர்தஞ்சிந்தமிசைநடித்தபதம்புலன்சேர்
விடயநுகர்வாரணமாமைம்பொறியுங்காக்குஞ்
சுத்தவருளங்குசமொத்திலங்குபதமென்பார்
தூயதிருக்காஞ்சியுண்மாதவர்க்கெதிர்நேர்காட்சி
மத்தகசாருடனெங்கோன்வாழ்குமரகோட்ட
மந்திரமாப்பீடமிசையெழுந்தருள்பூம்பதமே. (௮௦)

எழுவகையாமுற்பவங்களெடுத்தெடுத்துமேன்மே
லிம்பருடனும்பரும்போந்துழலாமேயெம்மைச்
சூழ்தரநாற்புறத்துமுற்றதுணைப்பதமோங்காரத்
தூயநிகேதனத்தொளிருநாயகமாம்பதநீள்

காழ்வளருங்கருமாக்கோடொடித்துமைகோன்மார்பிற்
  கடுக்கையொடுபுனைதரநேர்வாணடந்தபதமாம்
வாழ்வருளுஞ்சரவணனேற்பவன்குமரகோட்ட
  மந்திரமாப்பீடமிசையெழுந்தருள்பூம்பதமே. (அக)

கரமிரண்டாயிரவாணன்மாளிகையினுள்ளக்
  களிமிகுதாய்தந்தையர்சோதரரொடும்வீற்றிருந்து
தரமுதிரவ்வசுரேசன்புரிபூசையேற்றுத்
  தருக்கினொடுமிருந்தபதமவனொடுபோர்பொருமா
லுரமிகுந்தானையையெதிர்த்துச்சமர்செயக்கார்மயின்மே
  லூர்ந்தபொழுதரிவேண்டக்களம்விடுத்தபதமாம்
வரமருள்கார்த்திகைப்புதல்வன்றிருக்குமரகோட்ட
  மந்திரமாப்பீடமிசையெழுந்தருள்பூம்பதமே. (அஉ)

பூவாழமன்னுயிர்கடாம்வாழதொண்டு
  புரியுநவவீரருடன்போந்தபதமேனள்
சேவார்வெல்கொடிப்பெருமானுள்ளமகிழ்கூரத
  திருச்சேய்ஞலூரிலெழுந்தருளினியபதநாற்
பாவாணர்துதிமாலைபுனைந்தபதமன்னோர்
  பழங்கணொழித்தருள்பதமாமுருகன்விசாகேசன்
மாவார்நன்னிழற்காஞ்சிநகர்திருக்குமரகோட்ட
  மந்திரமாப்பீடமிசையெழுந்தருள்பூம்பதமே. (அங)

விண்முகத்துப்போகமெலாமதிகாரமெல்லாம்
  விரைமலர்தூய்ப்பணிந்தெழுந்தவிந்திரனுக்கீய்ந்தோர்
தண்முகச்செந்தாமரையோனுருத்திரனாரணன்மா
  றவம்புரிந்தேத்திடத்தொழின்மூன்றுஞற்றிடும்பேராற்ற
லுண்முகத்திற்றோன்றியவரக்களித்தபதமென்பா
  ரோங்கு நிகர்தருசண்முகப்பெருமாள்புகழ்தோய்
மண்முகத்திலொளிர்காஞ்சித்திருக்குமரகோட்ட
  மந்திரமாப்பீடமிசையெழுந்தருள்பூம்பதமே. (அச)

பொன்மைமுதலாகுநிறமோனைத்துமுடைத்தாய்ப்
  பொலிந்தபதமெங்குநிறைந்தொளிர்தலின்முக்காலத்
தன்மையொடுமன்னுயிர்செய்கருமமெலாமுணருந்
  தகைமேவுமுற்றுணர்வுபடைத்தபதம்பணிந்தோ

ரின்மையினையின்மைசெயநினைந்தபதமாரூ
ரிசைத்தமிழ்நாவலர்க்கொருகண்டருங்காஞ்சியரன்சேய்
வன்மைமிகுதாரகற்செற்றோன்குமரகோட்ட
மந்திரமாப்பீடமிசையெழுந்தருள்பூம்பதமே. (அரு)

மயன்மிகுந்துபெற்றபொருள்சிறிதெனவேமதித்து
வாஞ்சைபெறுப்பொருண்மீதுவைத்துமுயல்வாரோர்
நயன்மிகுந்தபதங்களெலாந்திருத்தியிலவாக
நான்முகனுதியாவேண்டுநித்தியப்பேரின்ப
வியன்மிகுந்ததிருநதியெலாம்படைத்தபதமெம்மை
யினிக்குறைவுசூழாதுதடுத்தபதமாமால்
வியன்மிகுந்தசேனனிவளர்குமரகோட்ட
வித்தியாபீடமிசைமேவியபூமபதமே. (அசு)

சுற்றுதிரைக்கடற்புவியிலைந்தொழிலுமாக்கித்
தொல்லுயிர்களொறுங்குலவிததோய்ந்திடினும்வான்போற்
பற்றலொடுவிடுப்பதுமாஞ்செயலிலதாயியல்பாய்ப்
பாசமெலாங்கழன்றிருந்தவாசமலர்ப்பதமா
லற்றவனைததொடர்ந்தபரமைங்கரனார்வீர
ரகந்தணிகரும்வயிரவரோடாடிமகிழ்பதமாம்
வெற்றிமிகுபிரமசாத்தன்குமரகோட்ட
வித்தியாபீடமிசைமேவியபூம்பதமே. (அஎ)

பல்லுலகுதோற்றுமறைமன்னுயிர்க்குந்தேவர்
பல்லோர்க்குமூரியசுதந்தரமனைத்துந்தன்பா
லலலறத்திகழ்வதனுற்சருவசுதந்தரமு
மழகுபெறப்படைத்தபதம்பாதாளமேழு
மெல்லுலவுவான்முகடுநீண்டுவளர்ந்தோங்கி
யெவ்வயினும்பரந்துநிறைந்திலங்குபதமெழிலார்
மெல்லியல்வள்ளியைமணநதோன்றிருக்குமரகோட்ட
வித்தியாபீடமிசைமேவியபூம்பதமே. (அஅ)

அருளாலுமொளியாலுமிசையாலுந்தழைபே
ராற்றன்மிகுதொழிலாலும்புகனீதியாலும்
பொருளாலும்பண்பாலுநிறைவாலுமென்றும்
பொன்றுதவின்பாலுமன்பாலுமிக்க

தெருளாலுங்*குறைவிலதாய்த்திகழலுப்த்தசத்திச்
சீர்முழுதும்படைத்தொளிருஞ்சின்மயப்பூம்பதமாம்
வெருளாதார்புகழ்பாலகுருகுமரகோட்ட
வித்தியாபீடமிசைமேவியபூம்பதமே. (அகூ)

நுண்ணியதோரணுவாகிமதிக்கருமோர்மகத்தாய்
நோக்குதொறுமப்பாலைக்கப்பாலாம்பொருளாய்
நண்ணியமண்முதனாதமீறுருமொன்றாய்
நான்மறையாய்நான்மறைக்குமெட்டாதநலமா
யெண்ணியவெலாமுடித்துமகிழளவிலாற்ற
லேய்ந்தபதங்கிரவுஞ்சகிரியடும்வேற்கரத்தோன்
விண்ணிமிரும்புகழ்க்காஞ்சிததிருக்குமரகோட்ட
வித்தியாபீடமிசைமேவியபூம்பதமே. (கூ0)

ஓதார்க்குமோதினர்க்குமகோசரமாமபதமே
லுண்மையருட்டுணைக்கொடுபின்றொடர்தருமன்புடைய
மேதாவியருக்கருகிற்றிகழ்ந்தபதங்கோடி
விண்ணிலவுங்கதிருமட்கவொளிர்ந்தபதஞ்சிரமே
னாதாந்தக்குருபதமாய்நடித்தபதங்காஞ்சி
நகர்க்கணியாந்திருக்குமரகோட்டமதிற்செவ்வேள்
ஆதாரசத்திமிசையைவகையாதனங்கொண்
டணிபெறுமந்திரபீடதெழுந்தருள்பூம்பதமே. (கூக)

அன்பின்வடிவானபதமன்பிலுறும்பயனா
யமர்ந்தபதமன்புசெயுமவர்க்கருளும்பதம்பே
ரின்பநிலையன்பிலும்வேறலதாகநிற்கு
மியல்புடையபெரியபதமன்பகன்றோர்பாலும்
வன்புபுரிந்தன்புவிளைததாட்கொள்பதம்புவிமேன்
மன்னுயிர்கட்குறுதொடர்பன்பினிலமைத்தபதமாந
தென்பழனியாண்டவன்வேற்கான்குமரகோட்டந்
திகழ்ந்தெலாஞ்செயவல்லசித்தர்பிரான்பதமே. (கூஉ)

அம்பலங்கடோறுமெழுந்தருளிநடமாடு
மற்புதப்பொற்பதந்தொனிக்குமறைச்சிலம்பினொடுதோய்
செம்பொனவமணியிமைக்கும்பாடகங்கிண்கிணியுஞ்
செயவீரத்திருக்கழலும்புனைந்தபதமிம்ப

ரும்பருடனெம்பரும்வந்தேத்துதமிழ்முதலா
யுள்ளபலமொழித்துதிகளொலிப்பமகிழ்பதமா
மெம்பரமகுருநாதன்றிருக்குமரகோட்டத்
திருந்தெலாஞ்செயவல்லசித்தர்பிரான்பதமே. (௧௩)

அரிபிரமரிந்திராதியவும்பர்மறைதே
ரந்தணர்மாமுனிவரிருடியர்கணங்கண்முறையால்
வரியளிபண்ணிசைததொளிர்கற்பகமாதிமலர்தூய்
மணிமுடிகணிலந்தோயவணங்கினராய்க்கிடப்பப்
பரிவினொடுதுணைவீரவாகுவழிவிலக்கப்
பரிசனம்பின்றொடர்ந்துவரப்பவனிகொள்பூம்பதமாந
தெரியனறுங்கடம்புனைகுகனைகுமரகோட்டந்
திகழ்நதெலாஞ்செயவல்லசிததர்பிரான்பதமே. (௧௪)

குங்குமங்கோரோசனைகஸ்தூரிகருப்பூரங
குளிர்புழுகுபனிநீருநதண்சாந்துந்திமிர்ந்து
துங்கமுறுமல்லிகைவெண்முல்லைகடிக்கொன்றை
துன்றியசெங்கடம்புநறுங்கரந்தைகுருக்கத்தி
செங்கணைவீரஞ்செருந்திவகுளம்பாடலநற
செங்கழுநீர்மலர்வாசங்கமழ்ந்தொளிர்பூம்பதமா
மெங்களையாண்டருள்குரவன்றிருககுமரகோட்டத்
திருநதெலாஞ்செயவல்லசிததர்பிரானபதமே. (௧௫)

பலவியங்கண்முழங்கவன்பர்பல்லாண்டுகூறப்
பாவலர்கள்பல்கவிதையேதெடுப்பமருங்கின்
மெல்லியசாமரையிரட்டக்கலவிமுறைகாட்டி
விழைதிருமுன்கணிகையாகணடஞ்செயவிப்பிரர்கள்
சொல்லுமறைத்தொனிமுழங்கமணிச்சிவிகையூர்ந்து
தூயதிருப்பள்ளியறைக்கெழுந்தருள்பூம்பதமாங்
கல்லெறிந்தோர்க்கருள்கம்பர்சேய்குமரகோட்டக்
கந்தனெலாஞ்செயவல்லசித்தர்பிரான்பதமே. (௧௬)

சித்தரவைதிகழுமலைக்குகைகடொறும்போந்து
தெண்டனிடுமவர்க்களவில்சித்திதரும்பதமா
முத்தரவைபுகுந்தவர்சேர்முத்தியெனப்பொலிந்து
மோனமுடியமர்ந்தபதஞானமொடுகிரியை

பத்திநெறிவழிபாட்டிற்கிசைந்தபதமடியார்
பழங்குடில்கடோறுமெழுந்தருளிமகிழ்பதமாம்
வித்தமலிந்தொளிர்காஞ்சித்திருக்குமரகோட்ட
மேவியெலாஞ்செயவல்லசித்தர்பிரான்பதமே. (கூஎ)

சுயம்புவாய்நிறைந்தபதமச்சுயம்புவுடனூந்
தூயவருளானபதம்பனையாகிக்குடிலை
யியங்கியவைந்தொழிற்றேவர்தமையாளும்பதமான்
றிலங்குயிருக்காதியாயருத்துபதஞான
நயம்படுசத்தியினெல்லாமுணர்ந்தபதங்கிரியா
நங்கையிச்சையாற்றொழில்செய்தன்பருள்பூம்பதமாங்
கயம்பொலிநீர்க்காஞ்சிநகர்த்திருக்குமரகோட்டக்
கந்தனெலாஞ்செயவல்லசித்தர்பிரான்பதமே. (கூஅ)

வள்ளிமலைக்குறமானைமுதியபிட்சாடனர்போல்
வடிவமெடுத்தடைந்தவள்செந்தினைமாத்தேனுண்டு
தெள்ளமுதம்பருகமலர்ச்சுனைக்கவளோடெய்திச்
சிறிவருகரிக்கஞ்சியவடழுவப்புணர்ந்து
கள்ளவிழ்பூங்குழலாட்குக்காட்சியளித்தங்கோர
கணியாய்நின்றவட்கவர்ந்துமீண்டமலர்ப்பதமாம்
விள்ளரியபுகழ்க்காஞ்சித்திருக்குமரகோட்ட
மேவியெலாஞ்செயவல்லசித்தர்பிரான்பதமே. (கூகூ)

அங்கணருட்சிவனுமைமாலயன்காமனாதி
யமரர்வனசரர்வாழ்த்தப்பல்லியங்கண்முழங்க
மங்கலநாண்குறவர்குலக்கொடிக்கணிவான்றெய்வ
மணக்கோலங்கொண்டபதமணவறைவீற்றிருந்து
துங்கமணச்சடங்காற்றிவலம்போந்துசுகித்துத்
துணைவியொடுநீடூழியின்புறவாழ்பதமாந்
திங்கடவழ்பொழிற்காஞ்சித்திருக்குமரகோட்டச்
சித்தர்பிரான்மயிலேறும்பெருமாள்பூம்பதமே. (க00)

இணையபுகழ்பலகோடிபடைத்தபதம்போற்றி
இங்ஙனநான்போற்றவருள்புரிந்தபதம்போற்றி
நினையுநினைவினுக்கப்பாலிருந்தபதம்போற்றி
நீக்கமறப்புவனமெலாநிறைந்தபதம்போற்றி

தனையடைந்தோர்க்கிட்டசித்திவழங்குபதம்போற்றி
தன்னிகருமிருநிதியாவிளங்குபதம்போற்றி
தினையளவுமெமைப்பிரியாத்துரியபதம்போற்றி
சேனுபதீசர்மகிழ்செல்வர்பதம்போற்றி. (௧0௧)

திருவடிப்புகழ்ச்சிமாலை முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

வாழி.

திருமருவுகச்சிநகாவாழிமாநிழல்வாழி
செல்வரேகம்பர்வாழி
வுகாமக்கணுமைவாழிதெய்வத்
திருததளிகள்பலவும்வாழி
நமருவுசேனுபதீசமொடருட்குமர
கோட்டமேன்மேலும்வாழி
குமரவேள்வாழியிருபணியர்கள்வாழிகுக
குடமயில்செவேலும்வாழி
மருமருவுமவன்மலர்த்திருவடிகள்வாழியம்
மலரடிக்கணிபுகழ்ச்சி
மாலேகனிவாழியதுவளைகுநரும்வாசிகரும்
வாஞ்சைமிகவோரும்வாழி
புருமருவுதேவாலயதருமபாலன
முனூற்றுசற்சைவர்வாழி
யோங்குசிவசாதனமெலாம்வாழியென்றென்று
முண்மையடியவர்வாழியே.

எல்லாமவல்லசித்தகுருநாதன்வாழி.